**News Release**
**Communiqué**

Ontario

Ministry of Citizenship and Immigration
Ministère des Affaires civiques et de l'Immigration

June 8, 2006

# புதிய குடிவரவாளர்கள் எதிர்நோக்கும் தடைகளை உடைத்தெறிய மக்குயிண்டியின் மாகாண அரசாங்கம் சட்டங்களை அறிமுகப்படுத்துகின்றது

*முன்வைக்கப்பட்டுள்ள சட்டங்கள் புதிய குடிவரவாளர்களை அவர்கள் சார்ந்த துறைகளிலேயே வேலை செய்ய வழி வகுக்கும்*

TORONTO – முதல்வர் மக்குயிண்டியின் அரசாங்கம் புதிதாக அறிமுகப்படுத்தவுள்ள சட்டமானது தொழில் நிபுணத்துவம் பெற்ற புதிய குடிவரவாளர்கள் தாங்கள் சார்ந்த துறைகளிலேயே தொழில்வாய்ப்புப் பெற வழி வகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேற்படி நியாயமான வழிகளை கொண்ட நிபுணத்துவம் பெற்றவர்களின் சட்டம் 2006 ஆனது சபையில் அங்கீகரிக்கப்பட்டால் தற்போது புதிய குடிவரவாளர்கள் எதிர்நோக்கும் பல தடைகள் உடைத்தெறிய வாய்ப்புக்கள் உண்டாகும் - இவ்வாறு ஒன்றாரியோ மாகாண குடியுரிமை மற்றும் குடிவரவு அமைச்சர் கௌரவ மைக் கோல் நேற்று அறிவித்துள்ளார்.

கடுமையாக வேலை செய்யக் கூடியவர்களும் தமக்கு பரிச்சியமான துறைகளில் வேலை செய்ய விரும்புகின்றவர்களுமான புதிய குடிவரவாளர்களின் பக்கமே நாங்கள் உள்ளோம் என்று கூறியுள்ள பிரதமர் மெக்குயின்டி மேலும் தெரிவிக்கையில் புதிய சட்டமானது புதிய குடிவரவாளர்களுக்குள்ள பல தடைகளை உடைத்து அதன் மூலம் அவர்கள் எமது பொருளாதாரத்தை முன்னேற்றக் கூடிய சந்தர்ப்பத்தை அவர்களுக்கு வழங்கவுள்ளன என்றும் கூறினார்.

முன்வைக்கப்பட்டுள்ள புதிய சட்டமானது கனடாவில் முதன் முதலாக கொண்டுவரப்படும் ஒன்றாகும். இதன்படி ஒன்றாரியோவின் 34 நிபுணத்துவத் துறைகள் சார்ந்த நிறுவனங்கள் தமது அங்கீகரிக்கும் முறையை நியாயமானதும் தெளிவானதும் திறந்த கொள்கையுடையதுமாக ஆக்கவேண்டும். அத்துடன் புதிய குடிவரவாளர்களின் தகைமைகளை மதிப்பிடும் போது மிக விரைவாக செய்ய வேண்டும் எனவும் நிபுணத்துவ நிறுவனங்கள் கேட்கப்படவுள்ளன.

முன்வைக்கபடவுள்ள சட்டங்கள் பின்வருவனவற்றையும் கொண்டிருக்கும்:-

- நியாயமான பதிவுகளை மேற்கொள்ளும் ஆணையாளர் என்பவர் நிபுணத்துவம் சார்ந்த துறைகளை மதிப்பிடும் பணியையும் மேற்கொண்டு அத்துடன் முன்வைக்கப்படவுள்ள சட்டங்கள் சார்பான மதிப்பீட்டு முறைகளையும் கண்காணிப்பார்.
- பிறநாடுகளில் பயிற்றப்பட்ட நிபுணர்களுக்கான புதிதான மத்திய நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அங்கு அவர்கள் தமது துறைகளில் ஒன்றாரியோவில் பணியாற்றும் வகையில் தகவல்கள் பெற்றுக் கொடுக்கப்படும். அத்துடன் மேற்படி நிலையமானது புதிய குடிவரவாளர்களுக்கு பயிற்சிகளையும் ஏனைய அனுபவங்களையும் பெறும் வகையில் கல்வி நிலையங்கள், தொழில் வழங்குவோர் மற்றும் சமூக சேவை நிலையங்கள் ஆகியவற்றோடு தொடர்பை ஏற்படுத்தும் இடமாகவும் இயங்கும்

வெளிநாடுகளில் பயிற்றப்பட்ட துறைசார் நிபுணர்கள் ஒன்றரியோவிற்கு மூளைசாலிகளாக இருக்க வேண்டும் என்பதையும் அவர்கள் மூளைகள் வீணடிக்கப்படக் கூடாது என்பதையும் நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்ற கூறிய அமைச்சர் கோல் ஒன்றாரியோவை தமது எதிர்கால வதிவிடமாக தெரிவு செய்யும் அதிகளவு புதிய குடிவரவாளர்கள் எதிர் நோக்கும் தடைகளை உடைக்கும் வகையில் நமது பங்களிப்பும் பிரச்சாரங்களும் இருக்க வேண்டும் எனவும் கூறினார்.

இது தொடர்பாக கருத்துக் கூறிய ஒன்றாரியோ பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் தலைவர் திரு பிரேய்ன் ஹன்ட் ஒன்றாரியோவின் தொழிலாளர் அணியில் வெளிநாட்டில் பயிற்றப்பட்ட துறைசார் நிபுணர்களை அறிமுகப்படுத்தும் வகையில் சட்டங்களை அறிமுகம் செய்துள்ள ஒன்றாரியோ அரசாங்கத்தை நாம் பாராட்ட வேண்டும் என்றார். அவர் மேலும் கருத்துக் கூறுகையில் இவ்வாறு பிறநாடுகளில் பயிற்றப்பட்ட துறைசார் நிபுணர்களுக்கும் வழங்கப்படும் சந்தர்ப்பம் ஆனது அவர்களுக்கு மட்டுமல்ல நமது முழு மாகாணத்திற்கே நன்மை பயக்கும் என்றும் கூறினார்.

இந்த நியாயமான வழிகள் முறைகள் கொண்ட துறைசார் நிபுணத்துவ சட்டம்-2006 ஆனது ஒன்றாரியோவின் புதிய குடிவரவாளர்களுக்கு உதவி செய்யும் வகையில் முதல்வர் மக்குயின்ரி அவர்களின் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பிந்திய ஒரு நடவடிக்கையாகும். இதில் உள்ள மற்றைய நன்மைகள் பின்வருவனவாகும்:-

- பிறநாடுகளில் பயிற்றப்பட்ட துறைசார் நிபுணர்களுக்காக ஒன்றாரியோ பொதுச் சேவையிலும் அரச சார்ந்த நிறுவனங்களிலும் ஆறு மாத கால பயிற்சி நெறிகளை ஆரம்பித்தல்
- வெளிநாடுகளில் பயிற்றப்பட்ட மருத்துவ துறைசார் பட்டதாரிகளுக்கான பயிற்ச்சி மற்றும் மதிப்பீட்டு திட்டங்களை இரண்டு மடங்காக்குதல்
- தற்போது பேச்சுவார்த்தை மட்டத்தில் உள்ளதும் கனடாவில் முதற் தடவையாக அறிமுகமாவதுமான கனடா-ஒன்றாரியோ குடிவரவு ஒப்பந்தத்தின் மூலம் கனடிய மத்திய அரசாங்கம், மொழிப் பயிற்சி மற்றும் குடிவரவு திட்டங்களுக்காக ஒதுக்கும் நிதியை நான்கு மடங்காக அதிகரித்து அதனை ஐந்து வருடங்களுக்கு 920 மில்லியன் டாலர்களாக ஆக்கும். இதன் மூலம் ஒன்றாரியோவிற்கு வரும் புதிய குடிவரவாளர்கள் பயனடைவார்கள்.
- Ontarioimmigration.ca என்னும் இணையத்தளத்தை ஆரம்பித்து அதன் மூலம் ஒன்றாரியோவிற்கு வரும் புதிய குடிவரவாளர்கள் நாளாந்தம் புதிதான தகவல்களை பெற்று தமது நிபுணத்துவம் சார்ந்த தொழில் துறைகளில் வேலைகளை பெற்றுக் கொள்ளலாம்

ஒன்றாரியோவிற்கு வருடாந்தம் 140000 புதிய குடிவரவாளர்கள் வருகின்றார்கள். அவர்களில் கடந்த இரண்டு வருடங்களில் வந்தவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் பல்கலைக் கழக பட்டதாரிகள் ஆவர். அடுத்த ஐந்து வருடங்களில் மாகாணத்திற்கு வரும் புதிய குடிவரவாளர்கள் நமது தொழிலாளர்கள் அணியின் வளர்ச்சிக்கு பலம் சேர்ப்பார்கள்.

- 30 -

Contacts:
Danna O'Brien
Minister's Office
*416-325-3460*

Karen Ras
Communications Branch
*416-314-7012*

*Disponible en français*

www.citizenship.gov.on.ca
www.OntarioImmigration.ca